**செ. கு. எண்:204** **நாள் :31.10.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு ஓ.பன்னீர்செல்வம்**

அவர்களின் அறிக்கை – 31.10.2014

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள **பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு** நீர்த்தேக்கங்களிலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு **1.11.2014** முதல் தண்ணீர் திறந்து விட ஆணையிடப்படுகிறது.

இதனால், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் மற்றும் திருநெல்வேலி வட்டங்களிலுள்ள **18,090** ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

**ஓ.பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**